*KALANJIYAM – International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed academic journal*
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.15

ARTICLES

# கம்பராமாயணத்தில் கம்பர் கூறும் அரசியல் நெறிகள்

*Political Principles Stated by Kamban in the Kamba Ramayanam*

**இரா. சங்கீதா [1], முனைவர் சா. பூங்கொடி [2,*]**

[1] பெரியார் பல்கலைக்கழக பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம் – 16.

[2] உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம் – 16.

***Corresponding author:** இரா. சங்கீதா, vrssangeetha@gmail.com

ARTICLE INFO

**Article history**
Received: 10 October 2026
Revised: 15 October 2026
Accepted: 27 October 2026

**Article ID**
KIJTS-2026-0007

**Peer review**
Double-blind peer review

**Keywords**
Citizens
Democracy
The story of Rama
Politics.

ABSTRACT

The meaning and literary richness of the Kamba Ramayanam continue to captivate readers to this day. Through his poetic genius, Kambar established principles regarding governance and the functioning of a government that exists for the welfare of its people. He emphasized that a king should be a servant of the people and should dedicate his life to the well-being of his subjects. Kambar presented the relationship between the ruler and the people from a democratic perspective and formulated political ideals accordingly. The story of Rama is largely structured around political events and principles. This article examines some of the political doctrines and ideals expressed by Kambar in his epic.

**How to cite this article:** முனைவர் சா. பூங்கொடி, & இரா. சங்கீதா (2026). கம்பராமாயணத்தில் கம்பர் கூறும் அரசியல் நெறிகள். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 209–221. https://doi.org/10.63300/kijts603112026.15
**Copyright and licence:** © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

***ஆய்வுச்சுருக்கம்***

கம்பராமாயணத்தின் பொருளும் சுவையும் படிப்போரை இன்றளவும் கவர்ந்திழுத்து வருகிறது. மக்களுக்கான அரசு, அதன் செயல்பாடுகள் குறித்த நெறிகளைத் தனது கவித்துவத்தால் வகுத்தவர் கம்பர். மன்னன் மக்களின் சேவகனாக இருக்க வேண்டும், குடிமக்களின் நன்மைக்காக வாழ்பவனாக இருக்க வேண்டும் என்று இயம்புகின்றார். மக்களுக்கும் மன்னனுக்கும் உள்ள தொடர்பை மக்களாட்சி முறைக்கண் கொண்டு அரசியல் வகுத்துள்ளார். இராம காதை பெரிதும் அரசியல் நிகழ்வுகளை

அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. இவ்வாறு கம்பர் படைத்துள்ள அரசியல் நெறிகளில் சிலவற்றைக் குறித்து இக்கட்டுரை அமைகிறது.

**திறவுச்சொற்கள்** – குடிமக்கள், மக்களாட்சி, இராம காதை, அரசியல்.

### *1. முன்னுரை*

கம்பர் கூறும் அரசியல் நெறிகள், ஒரு நாட்டை நல்லாட்சியுடன் வழிநடத்துவதற்கான உயரிய கோட்பாடுகளாக அமைகின்றன. மன்னன் மக்களின் நலனையே முதன்மையாகக் கருத வேண்டும். நீதி, அறம், கருணை, நடுநிலைமை, ஆலோசனை, கல்வி, வீரியம் ஆகிய பண்புகளுடன் ஆட்சி செய்ய வேண்டும் என்பதை அவர் வலியுறுத்துகிறார். மக்கள் நலனே அரசின் நோக்கம் என்பதையும், அரசன் குடிமக்களின் பாதுகாவலனாகவும் பணியாளனாகவும் திகழ வேண்டும் என்பதையும் பல இடங்களில் எடுத்துக்காட்டுகிறார். இவற்றைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ் இலக்கிய மரபில் அரசியல் சிந்தனை நெடுங்காலமாகத் தொடர்ந்து வருகின்றது. சங்க இலக்கியமான புறநானூறு மன்னனின் கொடை, வீரம், செங்கோல் ஆகியவற்றைப் போற்றுகின்றது. திருக்குறளின் பொருட்பால், அரசியல், அமைச்சியல் எனத் தனிப்பகுதிகளை வகுத்து, அரசன், அமைச்சன், நாடு, அரண், படை முதலிய அரசின் உறுப்புகளை முறைப்படுத்திக் கூறுகின்றது. இம்மரபின் தொடர்ச்சியாகவே கம்பர் தம் காப்பியத்தில் அரசியல் கருத்துக்களைப் படைத்துள்ளார் (Subramanian, 2013).

வான்மீகி இராமாயணத்தை முதல் நூலாகக் கொண்டு கம்பர் இயற்றிய இராமாவதாரம் என்னும் காப்பியம், பால காண்டம் முதல் யுத்த காண்டம் வரை ஆறு காண்டங்களாக அமைந்துள்ளது. கதையைத் தழுவிய போதும், தமிழ் மண்ணின் அறச் சிந்தனைகளையும் அரசியல் மரபுகளையும் அவர் தம் படைப்பில் இணைத்துள்ளார். அயோத்தியின் அரசமுறை, தசரதனின் ஆட்சி, இராமனின் முடிசூட்டு விழாவைக் குறித்த அமைச்சர் ஆலோசனை, போர்க்களக் காட்சிகள் ஆகிய பல இடங்களில் அவரது அரசியல் பார்வை வெளிப்படுகின்றது (Adithan, 1974; Ismail, 1976).

இக்கட்டுரை பகுப்பாய்வு மற்றும் ஒப்பீட்டு அணுகுமுறையைப் பின்பற்றுகின்றது. கம்பராமாயணப் பாடல்கள் முதன்மைச் சான்றுகளாகக் கொள்ளப்படுகின்றன (Alagirisamy, 1965; Gopalakrishnamachariyar, 2006a, 2006b). அவற்றின் கருத்துக்கள் புறநானூறு, திருக்குறள் ஆகிய நூல்களின் அரசியல் கருத்துக்களோடு ஒப்பிட்டு விளக்கப்படுகின்றன. அரசு அமையும் முறை, மன்னர் கடமை, அரசர் ஆளும் நாடு, அரசர்க்குரிய தகுதிகள், அமைச்சர்கள் ஆகிய தலைப்புகளில் ஆய்வு அமைகின்றது.




**Fig1: கம்பர் கூறும் அரசியல் நெறிகள்**

இப்படமானது கம்பராமாயணத்தில் கூறப்பட்டுள்ள நல்லாட்சியின் உயரிய கோட்பாடுகளான நீதி, அறம் மற்றும் அரசியல் நெறிகளை விளக்குகிறது. மேலும், புறநானூறு மற்றும் திருக்குறளின் அரசியல் சிந்தனைகளுடன் கம்பரின் காப்பியத்தை ஒப்பிட்டு, மக்கள் நலனே அரசின் முதன்மை நோக்கம் என்பதை இப்படம் தெளிவாகக் காட்சிப்படுத்துகிறது.

### *2. அரசு அமையும் முறை*

அரசன் எவ்வாறு விளங்க வேண்டும், அரசு எவ்வாறு அமைக்க வேண்டும் என்ற முறைமையைக் கம்பர் வெளிப்படையாகத் தருகின்றார்.

**"முறையறிந்து அவாவை நீக்கி**
**முனிவுழி முனிந்து வெஃகும்**
**இறையறிந்து உயிர்க்கு நல்கும்**
**இசைகெழு வேந்தன் காக்கப்**
**பொறை தவிர்ந்து உயிர்க்கும்**
**தெய்வப் பூதலம்"**

**(கம்பர் பாடல்)**

அரசன் அறமுறை அறிந்தவனாதல் வேண்டும். ஆசை அற்றவனாதல் வேண்டும். ஒறுத்தற்குரிய இடத்தில் ஒறுத்து, அணைத்தற்குரிய இடத்தில் அணைத்து, முறையோடு இறை பெற்று, குடிகளுக்கு உதவி, புகழ் பெற்று, மக்களின் துன்பத்தை நீக்கி, இம்மண்ணுலகைப் பொன்னுலகாக்கி நிற்றல் கடன் என்பதைக் கம்பர் தெளிவுபடுத்துகின்றார்.

இப்பாடலில் கம்பர் அரசனுக்குரிய ஆறு அடிப்படைப் பண்புகளைச் சுட்டுகின்றார். முதலாவது, அரசன் ‘முறை அறிந்தவன்’ ஆக இருக்க வேண்டும். அதாவது அறநூல்களும் அரசியல் நூல்களும் வகுத்த ஆட்சி முறையை அவன் உணர்ந்திருக்க வேண்டும். இரண்டாவது, ‘அவாவை நீக்கி’ என்பதால், தன்னலம் சார்ந்த பேராசையை அவன் விலக்கியிருக்க வேண்டும். ஆட்சியாளனின் பேராசையே குடிமக்களின் துன்பத்திற்குப் பெரும்பாலும் காரணமாகிறது என்பதைக் கம்பர் உணர்ந்திருந்தார்.

மூன்றாவதாக, ‘முனிவுழி முனிந்து’ என்பது தண்டிக்க வேண்டிய இடத்தில் தண்டிக்கும் உறுதியைக் குறிக்கின்றது. அளவுக்கு மீறிய இரக்கமும் அளவுக்கு மீறிய கடுமையும் ஆட்சிக்கு ஊறு விளைவிக்கும். குற்றம் செய்தோரைத் தண்டித்தலும் நல்லோரை அணைத்தலும் சமநிலையோடு அமைய வேண்டும். நான்காவதாக, ‘வெஃகும் இறை அறிந்து’ என்பது குடிமக்களிடமிருந்து பெறும் வரியை முறையோடும் அளவோடும் பெறுதலைக் குறிக்கின்றது. வரி மக்களைத் துன்புறுத்தும் சுமையாக மாறக்கூடாது என்பது இதன் உட்பொருள்.

ஐந்தாவதாக, ‘உயிர்க்கு நல்கும்’ என்பதால், பெற்ற வரியைத் திரும்ப மக்களின் நலனுக்கே பயன்படுத்த வேண்டும் என்பது விளங்குகின்றது. ஆறாவதாக, ‘இசைகெழு வேந்தன்’ என்ற தொடர், இவ்வனைத்தையும் செய்வதால் அரசன் புகழ் பெறுகின்றான் என்பதைக் காட்டுகின்றது. இத்தகைய வேந்தன் காக்கும் நிலம், தன் சுமையைத் தாங்க இயலாமல் வருந்தாமல் ‘தெய்வப் பூதலம்’ ஆகி நிற்கின்றது என்று கம்பர் நிறைவு செய்கின்றார். அரசின் நல்லாட்சியால் மண்ணுலகமே விண்ணுலகத்திற்கு இணையாக உயரும் என்பது கம்பரின் நம்பிக்கையாகும் (Gopalakrishnamachariyar, 2006b).

இவ்வாறு அரசு அமையும் முறையைக் கம்பர் ஓர் ஒழுங்குபட்ட திட்டமாகவே முன்வைக்கின்றார். அறிவு, தன்னடக்கம், நீதி, முறையான வரிவிதிப்பு, மக்கள் நலப் பணி, அதனால் விளையும் புகழ் என்னும் தொடர் சங்கிலியாக அவர் அரசின் இயக்கத்தைக் காண்கின்றார். இன்றைய நல்லாட்சிக் கோட்பாடுகளிலும் இக்கூறுகள் இடம் பெறுவது கம்பரின் பார்வையின் நிலைத்த தன்மையை உணர்த்துகின்றது.

**Fig 2: கம்பர் கூறும் நல்லரசு மற்றும் அரசன் இலக்கணம்**

இப்படமானது கம்பராமாயணத்தின் அடிப்படையில் ஒரு சிறந்த மன்னன் மற்றும் அரசின் பண்புகளை விளக்குகிறது. முறையறிதல், பேராசையை நீக்குதல், தகுந்த தண்டனை வழங்குதல், நியாயமான வரி விதித்தல் மற்றும் மக்களின் நலனுக்காக உழைத்தல் ஆகிய ஆறு அடிப்படைப் பண்புகளை இது வலியுறுத்துகிறது. இத்தகைய நல்லாட்சியால் மண்ணுலகமே விண்ணுலகமாகும் என்பது இக்கவிதையின் சாரம்

### *3. கம்பர் கூறும் மன்னர் கடமை*

மன்னன் இல்லாவிட்டால் உலகம் வாழ இயலாது. மன்னனே எல்லா அதிகாரங்களையும் பெற்றவன் என்பது முன்னோர் கருத்து.

**“நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்”**

**(புறம். 186)**

‘நாட்டுக்கு உயிர் மூச்சாய் இருப்பது நெல்லும் நீரும் அன்று; மன்னனுடைய செங்கோல் முறையே ஆகும். உலகம் மன்னனை உயிராகக் கொண்டிருக்கின்றது’ என்று புறநானூறு கூறுகிறது. கம்பர் காலத்தில் இக்கருத்து மாறிவிட்டது. குடிகள் தான் உயிர்; மன்னன் தான் உடம்பு. உயிரில்லாவிட்டால், குடிகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாவிட்டால், அரசாட்சி இயங்க முடியாது என்ற கருத்து கம்பர் காலத்தில் தோன்றிவிட்டது.

**“வையம் மன்னுயிராக அம்மன்னுயிர்**
**உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னனுக்கு**
**ஐயம் இன்றி அறம் கடவாது அருள்**
**மெய்யின் நின்றபின் வேள்வியும் வேண்டுமோ”**

**(அயோத்தியா காண்டம், மந்தரை சூழ்ச்சிப் படலம், 17)**

உலகத்தை உயிராகக் கொண்டு, அவ்வுயிர்களைத் தாங்கும் உடலாகத் தன்னை எண்ணிக் கொண்டு, அதற்கேற்றாற்போல் அரசு நடத்துகின்றவனே அரசன். அறம் என்பது ஐயம் இல்லாமல் அவனுக்குத் துணை நிற்கும். அரசன் இரக்கத்தையும் உண்மையையும் துணையாகக் கொண்டு நிற்பானாயின், அவன் வேள்வி செய்யவும் தேவை இல்லை என்று கம்பர் இச்செய்யுளிலே அரசனுக்கான கடமையையும் உரைக்கின்றார் (Gopalakrishnamachariyar, 2006a). மேலும் தன்னாட்டில் வாழும் மக்கள் முதல் எந்த உயிராக இருப்பினும் அவற்றின் விருப்பத்தை நிறைவேற்றும் ஓர் உடம்பே மன்னன் என்பதை,

**“வயிரவான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான்**
**உயிர் எலாம் தன் உயிர் ஒக்க ஓம்பலால்**
**செயிர் இலா உலகினில் சென்று நின்று வாழ்**
**உயிரெலாம் உறைவது ஓர் உடம்பும் ஆயினான்”**

**(கம்பர் பாடல்)**

என்று கம்பர் காட்டுகிறார். உடம்பாகிய மன்னன், உயிராகிய மக்களை எவ்வாறு கருதினான், எவ்வாறு நடத்தினான் என்பதை,

**“வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்**
**செய் எனக் காத்து இனிது அரசு செய்கிறான்”**

**(பா. 184)**

என்று காட்டுகின்றார்.

புறநானூற்றுப் பாடலும் கம்பரின் பாடலும் ஒரே உவமையைக் கையாள்கின்றன; ஆனால் அதன் திசையை மாற்றி அமைக்கின்றன. புறநானூற்றில் மன்னன் உயிர், உலகம் உடல். கம்பரில் உலகம் உயிர், மன்னன் உடல். உடல் உயிரைத் தாங்குவதற்காகவே உள்ளது; உயிர் நீங்கினால் உடலுக்கு மதிப்பில்லை. இவ்வுவமை மாற்றத்தின் மூலம், அரசின் அதிகாரம் மக்களிடமிருந்தே தோன்றுகின்றது என்ற மக்களாட்சிச் சிந்தனையின் விதையைக் கம்பர் விதைக்கின்றார் (Sadasivam, 2005).

‘வேள்வியும் வேண்டுமோ’ என்ற வினா, சடங்குகளை விட அறவழி ஆட்சியே மேலானது என்ற கருத்தை வலியுறுத்துகின்றது. அக்காலத்தில் அரசர்கள் புகழுக்காகவும் தெய்வ அருளுக்காகவும் பெரும் வேள்விகளைச் செய்தனர். ஆனால் மக்களிடம் அருளும் மெய்ம்மையும் கொண்டு நடக்கும் அரசனுக்கு அத்தகைய வேள்விகள் தேவையற்றவை என்று கம்பர் துணிந்து கூறுகின்றார். மக்கள் நலப் பணியே அரசனின் உண்மையான வழிபாடு என்பது இதன் உட்பொருளாகும்.

‘உயிர் எலாம் தன் உயிர் ஒக்க ஓம்பலால்’ என்ற வரி, தசரதன் எல்லா உயிர்களையும் தன் உயிரைப் போலவே பேணினான் என்பதைக் காட்டுகின்றது. இங்கு ‘உயிர்’ என்பது மனிதர்களை மட்டுமன்றி விலங்கு, பறவை முதலிய அனைத்து

உயிர்களையும் தழுவுகின்றது. ‘வறிஞன் ஓம்பும் ஓர் செய்’ என்ற உவமை மிக நுட்பமானது. ஏழை உழவன் தனக்கிருக்கும் ஒரே வயலை எவ்வளவு கவனத்தோடும் அன்போடும் காப்பானோ, அவ்வளவு கவனத்தோடு தசரதன் உலகம் முழுவதையும் காத்தான் என்பது அதன் பொருள். பரந்த அதிகாரம் பெற்ற மன்னன், தன் நாட்டை ஏழையின் ஒற்றை வயலைப் போல் அருமையாகக் கருத வேண்டும் என்பதே கம்பர் வகுக்கும் மன்னர் கடமையாகும் (Gopalakrishnamachariyar, 2006b; Ismail, 1976).

**Fig 3: புறநானூறும் கம்பரும்: மன்னன் மற்றும் குடிகள் பற்றிய ஒப்பீடு**

புறநானூறு மன்னனை உயிராகவும், உலகத்தை உடலாகவும் கருதுகிறது. மாறாக, கம்பர் குடிகளையே உயிராகவும், அவர்களைத் தாங்கும் உடலாக மன்னனையும் உருவகப்படுத்துகிறார். இம்மாற்றமானது, மக்கள் நலனே அரசாட்சியின் அடிப்படை மற்றும் அரசின் அதிகாரம் மக்களிடமிருந்தே தோன்றுகிறது என்ற முற்போக்குச் சிந்தனையைத் தெளிவாக உணர்த்துகிறது.

### *4. அரசர் ஆளும் நாடு*

பற்பல குழுக்களும், ஆட்சியைப் பாழ்படுத்தாத உள்நாட்டுப் பகைவர்களும், அரசனைத் துன்புறுத்தும் கொலைகாரக் குறும்பர்களும் இல்லாத நாடே சிறந்த நாடு என்றார் வள்ளுவர். இதனை,

**“பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்**
**கொல் குறும்பும் இல்லது நாடு”**

**(குறள் 735)**

என்ற குறள் வழி அறியலாம்.

இக்கருத்தை அடியொட்டி, பகையின்றி ஒரு நாடு வாழ்தல் வேண்டும் என்று கம்பர் தம் இராமகாதையின் தொடக்கத்தில் ஒரு காட்சியில் காட்டுகிறார். மாந்தாதா என்னும்

அரசன் தசரதனின் முன்னோர்களில் ஒருவன். அம்மன்னனின் ஆட்சிக் காலத்தில், ஓடுகின்ற ஆற்றுநீரில் ஒரு மானும் புலியும் அருகருகே இருந்து நீர் அருந்தின. பிறகு இரண்டும் அமைதியாகச் சென்றன. ஒன்றால் மற்றொன்றுக்குத் தொல்லை இல்லை. இதனை,

**"…புலிப் போத்தும் புல்வாயும்**
**ஒரு துறையில் நீர் உண்ண**
**உலகு ஆண்டான் உளன் ஒருவன்"**

**(பால. வரலாற்று. 7)**

என்ற பாடல் வரிகள் உணர்த்தும். விலங்குகளே இப்படி வாழ்கின்றன எனில், அந்நாட்டு மக்கள் எத்தகையவராக இருப்பர் என்று நம்மை உணர வைத்துள்ளார் கம்பர். பகைவர் தொல்லை இல்லாமல் ஒரு நாடு இருக்க வேண்டும் என்பதே இதன் மூலம் கம்பர் உணர்த்தும் கருத்தாகும். கோசல நாட்டில் எல்லோரும் பொருட்செல்வம் உள்ளவர்கள்; வீரச்செல்வம் உள்ளவர்கள்; மெய்யுரைக்கும் பண்புச் செல்வம் உள்ளவர்கள்; கல்விச் செல்வமும் உள்ளவர்கள் என்பதை,

**"வண்மை யில்லை ஓர் வறுமையின் மையால்**
**திண்மையில்லை நேர் செறுநர் இன்மையால்**
**உண்மையில்லை பொய்யுரை இலாமையால்**
**ஒண்மையில்லை பல் கேள்வி மேவலால்"**

**(கம்பர் பாடல்)**

இப்பாடல் வழி கம்பர் உரைக்கின்றார். இத்தகைய தாழ்விலாச் செல்வரைக் கொண்டிருந்தது கோசல நாடு. ஒரு நாடு எப்படியிருக்க வேண்டும் என்பதை மேற்கண்ட கம்பரின் பாடல் வரிகள் அழகுறக் காட்டுகின்றன.

வள்ளுவர் குறிப்பிடும் மூன்று தீமைகளும் நாட்டின் அமைதியைக் குலைப்பவை. 'பல் குழு' என்பது ஒன்றுக்கொன்று முரண்பட்டுப் பிரிந்து நிற்கும் கூட்டங்களைக் குறிக்கின்றது. 'பாழ் செய்யும் உட்பகை' என்பது வெளிப்படையாகத் தெரியாமல் உள்ளிருந்தே நாட்டை அழிக்கும் பகையைக் குறிக்கின்றது. 'வேந்தலைக்கும் கொல் குறும்பு' என்பது அரசனையே அச்சுறுத்தும் வன்முறைக் கூட்டங்களைக் குறிக்கின்றது. இம்மூன்றும் இல்லாத நிலையில் மட்டுமே ஒரு நாடு 'நாடு' என்ற பெயருக்குத் தகுதி பெறுகின்றது என்பது வள்ளுவர் கருத்து.

கம்பர் இக்கருத்தை நேரடியான அறிவுரையாகக் கூறாமல், ஒரு கவின்மிகு காட்சியாக மாற்றியமைக்கின்றார். இயல்பாகவே பகைமை கொண்ட புலியும் மானும் ஒரே துறையில் நீர் அருந்துவது, அச்சமற்ற சமூகத்தின் குறியீடாக அமைகின்றது. வலியவன் எளியவனைத் துன்புறுத்தாத நிலை, அதாவது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நிலை, அக்காட்சியில் உணர்த்தப்படுகின்றது. அரசனின் முறையான ஆட்சியின் பயனாகவே இவ்வமைதி நிலவுகின்றது என்பதையும் 'உலகு ஆண்டான்' என்ற தொடர் சுட்டுகின்றது (Adithan, 1974).

‘வண்மை இல்லை’ என்ற பாடல் கம்பரின் புகழ்பெற்ற எதிர்மறை அணிநலம் வாய்ந்த பாடல்களுள் ஒன்றாகும். கொடுப்பதற்கு வறியவர் யாரும் இல்லாததால் வள்ளன்மைக்கு இடமில்லை; எதிர்க்கும் பகைவர் இல்லாததால் வலிமையைக் காட்ட இடமில்லை; பொய் பேசுவோர் இல்லாததால் உண்மையைத் தனியே போற்ற வேண்டியதில்லை; அனைவரும் கல்வி கேள்விகளில் சிறந்திருப்பதால் அறிவுடைமை தனித்துத் தெரியவில்லை. இல்லாமையைச் சொல்லியே நிறைவைக் காட்டும் இந்நுட்பம், கம்பரின் கவித்திறனுக்குச் சான்றாகும் (Sadasivam, n.d., 2005).

இப்பாடல் கம்பர் கற்பனை செய்யும் நல்வாழ்வு நாட்டின் நான்கு தூண்களைக் காட்டுகின்றது. அவை, வறுமையின்மை எனும் பொருளாதார நிறைவு, பகையின்மை எனும் பாதுகாப்பு, பொய்யின்மை எனும் அற ஒழுக்கம், கல்வி நிறைவு எனும் அறிவு வளம் என்பனவாகும். இன்றைய நலவாழ்வு அரசுக் கோட்பாடுகள் முன்வைக்கும் இலக்குகளோடு இவை நெருங்கிய ஒற்றுமை உடையவை. இதன் மூலம், அரசின் வெற்றி அரசனின் புகழில் அல்ல, மக்களின் வாழ்க்கைத் தரத்திலேயே அளக்கப்பட வேண்டும் என்பதைக் கம்பர் உணர்த்துகின்றார்.

**Fig 4: வள்ளுவரும் கம்பரும்: சிறந்த நாட்டின் இலக்கணம்**

இப்படமானது, தீய குழுக்கள், உட்பகை மற்றும் வன்முறை இல்லாத நாடே சிறந்த நாடு என்ற வள்ளுவரின் கருத்தை விளக்குகிறது. கம்பர் இதைப் பின்பற்றி, புலிகளும் மான்களும் ஒற்றுமையாக நீர் அருந்தும் கோசல நாட்டுக்காட்சி மூலம், அச்சமற்ற மற்றும் வளமான சமூகத்தை உருவகப்படுத்தியுள்ளார். நாட்டின் வெற்றி மக்கள் நலனிலேயே உள்ளது என்பது இதன் சாரம்.

### *5. அரசர்க்குரிய தகுதிகள்*

அரசர்க்கு இருக்க வேண்டிய தகுதிகளைப் பட்டியலிடும் போது, கம்பர் அஞ்சாமை, ஊக்கம் இவை இரண்டும் அவசியம் என வலியுறுத்துகிறார்.

**“ஆள் எலாம் இழந்த தேரும் ஆனையும் ஆடல் மாவும்**
**நாள் எலாம் எண்ணினாலும்**
**தொலைவிலர் நாதர் இன்றித்**
**தாள் எலாம் குலைய**
**ஓடித் திரிவன தாங்கல் ஆற்றும்**
**கோள் இலா மன்னன் நாட்டுக்**
**குடியெனக் குலைவ கண்டான்”**

**(கம்பர் பாடல்)**

அரக்கர்களும் குரக்கர்களும் கடும் போர் புரிகின்றனர். அரக்கர்கள் மழை போல அம்புகளைப் பொழிகின்றனர். பதிலுக்கு இலக்குவனும் அம்புகளை விடுகின்றான். எங்கும் பிணம்; எங்கும் குருதியாறு. இவ்வாறு காட்சியளிக்கும் அவ்விடத்தில், நால்வகைப் படைகளும் சிதறி அழிந்து, தக்க தலைவர் இன்றி, குடிகளைத் தாங்கும் ஆற்றல் இல்லா அரசனின் நாட்டு மக்களைப் போல் கலைந்து சிதறி ஓடினார்கள் என்று காட்டுகின்றார்.

இப்பாடலில் கம்பர் கையாளும் உவமை கவனிக்கத்தக்கது. போர்க்களத்தில் வீரர்களை இழந்து, திசை தெரியாமல் ஓடும் தேர், யானை, குதிரைகளை விளக்க, அவர் ‘கோள் இலா மன்னன் நாட்டுக் குடி’யை உவமையாகக் கொள்கின்றார். ‘கோள்’ என்பது கொள்கை, வலிமை, தாங்கும் திறன் ஆகியவற்றைக் குறிக்கும். உறுதியான கொள்கையும் தாங்கும் ஆற்றலும் இல்லாத அரசனின் குடிமக்கள், போர்க்களத்தில் தலைவனை இழந்த படையைப் போல் அலைக்கழிக்கப்படுவர் என்பது இதன் பொருள்.

இங்கு எதிர்மறையாகக் காட்டப்படுவதன் மூலம், நல்லரசனுக்குரிய இரண்டு தகுதிகள் தெளிவாகின்றன. முதலாவது அஞ்சாமை. நெருக்கடி வரும் வேளையில் அஞ்சாது நின்று மக்களுக்கு நம்பிக்கை அளிப்பவனே அரசன். இரண்டாவது ஊக்கம். செயலில் தளராத முயற்சியோடு மக்களை வழிநடத்துபவனே தலைவன். இவ்விரு பண்புகளும் இல்லாதபோது மக்கள் அச்சத்திலும் குழப்பத்திலும் சிதறுவர் என்பதைப் போர்க்களக் காட்சி வழி கம்பர் உணர்த்துகின்றார் (Alagirisamy, 1965; Subramanian, 2013).

வள்ளுவரும் அரசனுக்குரிய இயல்புகளாக அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் ஆகியவற்றைச் சுட்டுவதுடன், ஊக்கமுடைமைக்கென்றே தனி அதிகாரத்தையும் அமைத்துள்ளார். கம்பரின் இப்பாடல் அக்கருத்தை ஒரு போர்க்களப் படிமமாக மாற்றியமைத்து, தலைமையின் இன்றியமையாமையை வாசகர் மனதில் ஆழப் பதிய வைக்கின்றது. தலைவன் இல்லாத படையும், தாங்கும் ஆற்றல் இல்லாத அரசனின் நாடும் ஒன்றே என்ற ஒப்புமை, அரசியல் தலைமைக்கும் இராணுவத் தலைமைக்கும் உள்ள ஒற்றுமையையும் சுட்டுகின்றது.

இக்காட்சியின் மூலம் கம்பர் இன்னொரு நுட்பத்தையும் வெளிப்படுத்துகின்றார். மக்களின் சிதறலுக்குக் காரணம் மக்கள் அல்லர்; அவர்களைத் தாங்கும்

தலைமையின் குறைபாடே காரணம். இதனால் நாட்டின் நிலைக்கு முழுப் பொறுப்பையும் அரசனே ஏற்க வேண்டும் என்ற பொறுப்புணர்வுக் கோட்பாடு இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

***5.1 கம்பர் காட்டும் அமைச்சர்கள்***

கம்பன் காட்டும் அமைச்சர்கள் கேள்வி ஞானம் மிகுதியும் பெற்றவர்கள். பரம்பரையாக நற்குடியில் தோன்றிப் பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தவர்கள். நடப்பதைக் கொண்டே இனி என்ன நடக்கும் என்பதை உணரும் ஆற்றல் பெற்றவர்கள். வினையால் தீமை நேரினும் அதைப் பற்றிக் கவலை கொள்ளாமல் அதனையும் மாற்றும் திறம் வாய்ந்தவர்கள். அரிய அரசியல் நூல்களையும் கற்றுத் தேர்ந்தவர்கள். எல்லாவற்றையும் விட மானமே பெரிது என எண்ணும் இயல்பினர் என்னும் பொருளில்,

**“உற்றது கொண்டு மேல்வந்து**
**உறுபொருள் உணரும் கோளார்**
**மற்றது வினையின் வந்தது ஆயினும்**
**மாற்றல் ஆற்றும்**
**பெற்றியர் பிறப்பின் மேன்மைப்**
**பெரியவர் அரிய நூலும்**
**கற்றவர் மானம் நோக்கின்**
**கவரிமா அனைய நீரார்”**

**(அயோத்தியா காண்டம், மந்திரப் படலம், 7)**

என்று காட்டுகின்றார்.

கம்பன் காட்டும் அமைச்சர்கள், தம் உயிரைப் பற்றி எண்ணாது, அரசன் சினந்தாலும் அச்சினத்தைத் தாங்கிக் கொண்டு, நீதியை விடாமல் இடித்துச் சொல்லும் இயல்பினர். நேர்மை வழியில் நடப்பவர்கள். முக்காலமும் அறிந்தவர்கள். தாம் பலராக இருப்பினும் பல கருத்துக்களைக் கூறாது, அனைவரும் ஒன்றுபட்டு ஒருமித்த கருத்துக் கூறும் இயல்புடையவர்கள். இதனைக் கம்பர்,

**“தம் உயிர்க்கு இறுதி எண்ணார்**
**தலைமகன் வெகுண்ட போதும்**
**வெம்மையைத் தாங்கி நீதி**
**விடாது நின்று உரைக்கும் வீரர்**
**செம்மையின் திறம் பல செல்லாத்**
**தேற்றத்தார் தெரியும் காலம்**
**மும்மையும் உணர வல்லார்**
**ஒருமையே மொழியும் நீரார்”**

**(அயோத்தியா காண்டம், மந்திரப் படலம், 9)**

இவ்வாறு அமைச்சர்களின் தகுதியைப் பற்றிக் கூறுகின்றார். வள்ளுவர் கூறும் அமைச்சர் இலக்கணம் இங்கு நினைவு கூரத்தக்கது.

**"தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்லது அமைச்சு"**

**(அதிகாரம் 64, குறள் 4)**

செய்யத்தக்க செயல்களை ஆராய்ந்து அறிவதும், அச்செயல் முடிவதற்குரிய வழிகளை ஆராய்ந்து செய்வதும், உறுதியாகத் தன் கருத்தை வெளியிடுவதும் ஆகியவற்றில் வல்லவனே அமைச்சனாவான். வள்ளுவரின் இக்கருத்தே அமைச்சர்களின் தகுதி குறித்த கம்பனின் கருத்திற்கு அடிப்படையாக அமைகிறது.

இவ்விரு பாடல்களும் அயோத்தியா காண்டத்தின் மந்திரப் படலத்தில் இடம் பெறுகின்றன. இராமனுக்கு முடிசூட்டும் முடிவைப் பற்றி ஆலோசிக்கத் தசரதன் அமைச்சர்களை அவைக்கு அழைக்கும் சூழலில், அவ்வமைச்சர்களின் இயல்புகளைக் கம்பர் விரிவாக எடுத்துரைக்கின்றார் (Gopalakrishnamachariyar, 2006a). ஆட்சியின் மிக முக்கியமான முடிவுகள் அமைச்சர் அவையின் ஆலோசனையோடு எடுக்கப்பட வேண்டும் என்ற கூட்டு முடிவுமுறைக் கொள்கையை இச்சூழலே வெளிப்படுத்துகின்றது.

முதல் பாடலில் இடம் பெறும் 'கவரிமா அனைய நீரார்' என்ற உவமை சிறப்பானது. மயிர் நீங்கின் உயிர் வாழாது எனக் கூறப்படும் கவரிமானைப் போல, மானம் இழக்க நேரின் உயிரையும் துறக்கும் தன்மையினர் அவ்வமைச்சர்கள் என்பது இதன் பொருள். இது வள்ளுவரின் மானம் அதிகாரத்தையும் நினைவூட்டுகின்றது. 'உற்றது கொண்டு மேல் வந்து உறுபொருள் உணரும் கோளார்' என்பது, நிகழ்காலச் சூழலை ஆராய்ந்து எதிர்கால விளைவுகளை முன்கூட்டியே கணிக்கும் தொலைநோக்குத் திறனைக் குறிக்கின்றது. இது இன்றைய ஆட்சியியலில் கொள்கை வகுப்பவர்களிடம் எதிர்பார்க்கப்படும் முன்னறி திறனோடு ஒப்பிடத்தக்கது.

இரண்டாம் பாடல் அமைச்சர்களின் அறத் துணிவை முன்னிறுத்துகின்றது. 'தலைமகன் வெகுண்ட போதும் வெம்மையைத் தாங்கி நீதி விடாது நின்று உரைக்கும் வீரர்' என்ற வரிகள், அரசனின் சினத்திற்கு அஞ்சாமல் உண்மையை உரைக்கும் துணிவை வலியுறுத்துகின்றன. இது வள்ளுவர் கூறும் 'இடிக்கும் துணை' என்ற கருத்தோடு ஒத்துப் போகின்றது. அரசனுக்கு இனியவற்றை மட்டும் கூறும் அமைச்சரை விட, நீதியானவற்றைக் கூறும் அமைச்சரே நாட்டுக்கு நலம் பயப்பவர் என்பது இதன் உட்பொருள் (Ismail, 1976).

'ஒருமையே மொழியும் நீரார்' என்ற தொடர், அமைச்சர்கள் பலராக இருந்தாலும் தமக்குள் கலந்து ஆராய்ந்து ஒருமித்த முடிவையே அரசனிடம் முன்வைப்பர் என்பதைக் காட்டுகின்றது. இது வள்ளுவர் கூறும் 'ஒருதலையாச் சொல்லல்' என்ற இலக்கணத்தோடு நேரடியாகப் பொருந்துகின்றது. முரண்பட்ட கருத்துக்கள் அரசனைக் குழப்பும்; ஒருமித்த தெளிவான கருத்து உறுதியான முடிவுக்கு வழி

வகுக்கும். இவ்வாறு வள்ளுவரின் அமைச்சியல் கோட்பாட்டைக் கம்பர் தம் காப்பிய மாந்தர்களின் வழியே செயல்வடிவில் காட்டியுள்ளார் (Subramanian, 2013).

**Fig 5: அரசர்க்கும் அமைச்சர்களுக்கும் உரிய தகுதிகள்**

இப்படமானது ஒரு மன்னனுக்குரிய அஞ்சாமை, ஊக்கம் மற்றும் நாட்டின் நிலைமைக்கான பொறுப்புணர்வை விளக்குகிறது. மேலும், அமைச்சர்களின் அறிவு, தொலைநோக்கு, அறத்துணிவு, நேர்மை, மானம் மற்றும் ஒற்றுமை ஆகிய உயர்ந்த பண்புகளைக் கம்பரின் காப்பியப் பாடல்கள் மற்றும் உவமைகள் வாயிலாகத் தெளிவாக எடுத்துரைக்கிறது.

### *6. முடிவுரை*

கம்பர் தம் இராமகாதையில் அரச முறைமைகள், இயல்புகள் பலவற்றை ஆங்காங்கு சுட்டிச் செல்கிறார். அரசு பற்றிப் பேசும் போதெல்லாம் கம்பர் கொடை, முறை, வீரம், ஊக்கம், அஞ்சாமை, செருக்கு ஆகியவற்றை விளக்கிக் காட்டுகிறார். அரசியல் திறம்பட நடக்க வேண்டுமாயின், ஆள்வோரும் அறிவுள்ளவர்களாக, ஆற்றல் உள்ளவர்களாக, நடுநிலைமையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இன்சொல்லும் இன்முகமும் கொண்டு எல்லோரையும் தம் வசமாக்கும் தன்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்களை வெளிக்காட்டுகின்றார்.

இவ்வாய்வின் வழி பெறப்படும் முடிவுகள் பின்வருமாறு:

1. அரசு அமையும் முறையில் அறிவு, தன்னடக்கம், நீதி, முறையான வரி, மக்கள் நலப் பணி ஆகியவற்றைக் கம்பர் ஒருங்கிணைந்த நெறியாக வகுக்கின்றார்.
2. புறநானூற்றின் ‘மன்னன் உயிர்’ என்ற கருத்தை ‘மக்கள் உயிர், மன்னன் உடல்’ என மாற்றியமைத்ததன் மூலம், அரசின் அதிகாரம் மக்களிடமிருந்தே

தோன்றுகின்றது என்ற மக்களாட்சிச் சிந்தனையைக் கம்பர் முன்வைக்கின்றார்.

3. பகையின்மை, வறுமையின்மை, பொய்யின்மை, கல்வி நிறைவு ஆகியவற்றைக் கொண்ட கோசல நாட்டைச் சிறந்த நாட்டின் முன்மாதிரியாகக் கம்பர் படைக்கின்றார்.
4. அஞ்சாமையும் ஊக்கமும் இல்லாத அரசனின் நாட்டு மக்கள் தலைவனை இழந்த படையைப் போல் சிதறுவர் என்பதைப் போர்க்களக் காட்சி வழி உணர்த்துகின்றார்.
5. அமைச்சர்களின் கல்வி, தொலைநோக்கு, மானம், அறத் துணிவு, ஒருமித்த கருத்து ஆகிய இயல்புகளைக் கூறும் கம்பர், வள்ளுவரின் அமைச்சியல் கோட்பாட்டைக் காப்பிய வடிவில் விரித்துரைக்கின்றார்.

இவ்வகையில், கம்பரின் அரசியல் நெறிகள் தமிழ் அரசியல் சிந்தனை மரபின் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் அமைகின்றன. மன்னராட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட காப்பியமாயினும், மக்கள் நலனை மையமாகக் கொண்ட அதன் அரசியல் பார்வை இன்றைய மக்களாட்சிச் சூழலுக்கும் பொருந்தக்கூடியதாக உள்ளது. கம்பராமாயணத்தின் பிற காண்டங்களில் இடம்பெறும் நீதி, போர் அறம், தூது முதலிய அரசியல் கூறுகளை மேலும் விரிவாக ஆராய இவ்வாய்வு வழிவகுக்கின்றது.

***7. References***


1. Adithan, A. K. (1974). *Kambar kavinayam* [The poetic beauty of Kambar]. Vanathi Pathippagam.
2. Alagirisamy, K. (1965). *Kambaramayanam: Sundara kandam* [Kamba Ramayanam: Sundara Kandam]. Tamil Puthakalayam.
3. Gopalakrishnamachariyar, V. M. (Ed.). (2006a). *Kambaramayanam: Ayodhya kandam (moolamum uraiyum)* [Kamba Ramayanam: Ayodhya Kandam (text with commentary)]. Uma Pathippagam.
4. Gopalakrishnamachariyar, V. M. (Ed.). (2006b). *Kambaramayanam: Bala kandam (moolamum uraiyum)* [Kamba Ramayanam: Bala Kandam (text with commentary)]. Uma Pathippagam.
5. Ismail, M. M. (1976). *Kamban kanda Raman* [The Rama envisioned by Kamban]. Vanathi Pathippagam.
6. Sadasivam, M. (n.d.). *Kamban vazhangum monai inbam* [The delight of alliteration in Kamban]. Meera Nilaiyam.
7. Sadasivam, M. (2005). *Kambanin vairavarigal* [Kamban's diamond verses]. Manivasagar Pathippagam.
8. Subramanian, S. V. (2013). *Kamban kavinayam* [The poetic beauty of Kamban] (Vol. 2). Manivasagar Pathippagam.


## References


Adithan, A. K. (1974). Kambar kavinayam [The poetic beauty of Kambar]. Vanathi Pathippagam.

Alagirisamy, K. (1965). Kambaramayanam: Sundara kandam [Kamba Ramayanam: Sundara Kandam]. Tamil Puthakalayam.

Gopalakrishnamachariyar, V. M. (Ed.). (2006a). Kambaramayanam: Ayodhya kandam (moolamum uraiyum) [Kamba Ramayanam: Ayodhya Kandam (text with commentary)]. Uma Pathippagam.

Gopalakrishnamachariyar, V. M. (Ed.). (2006b). Kambaramayanam: Bala kandam (moolamum uraiyum) [Kamba Ramayanam: Bala Kandam (text with commentary)]. Uma Pathippagam.

Ismail, M. M. (1976). Kamban kanda Raman [The Rama envisioned by Kamban]. Vanathi Pathippagam.

Sadasivam, M. (n.d.). Kamban vazhangum monai inbam [The delight of alliteration in Kamban]. Meera Nilaiyam.

Sadasivam, M. (2005). Kambanin vairavarigal [Kamban's diamond verses]. Manivasagar Pathippagam.

Subramanian, S. V. (2013). Kamban kavinayam [The poetic beauty of Kamban] (Vol. 2). Manivasagar Pathippagam.